மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 07 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.01/2020
அ.வ.எண்.20/2018

இலட்சுமணன் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. கே.லிங்கேஸ்வரன் (இறந்துவிட்டார்)
2. சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம்.
3. வட்டாட்சியர், மேட்டூர் அணை.
4. கிராம நிர்வாக அலுவலர், ஆவடத்தூர் கிராமம். ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

5. பாலரத்தினம்
6. சித்தேஸ்வரன்
7. தங்கம்
8. ராஜகணபதி
9. செண்பகவடிவு ...எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள்

இம்மனு கடந்த 06.01.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சிவபிரகாசம் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்தவராகவும், 2 முதல் 4ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.பி.சித்தன் அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் செய்யாத நிலையிலும், 5 முதல் 9ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு இந்திய காலவரையறைச்சட்டம் பிரிவு 5ன் கீழ் 1ம்பிரதிவாதியின் வாரிசுகளை 5 முதல் 9 பிரதிவாதிகளாக சேர்க்க மனுதாக்கல் செய்வதில் ஏற்பட்ட 85 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்கக்கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

தாவா நிலுவையில் இருந்தபோது 1ம்பிரதிவாதி 02.08.2019ல் இறந்துவிட்டார். 1ம்பிரதிவாதியின் வாரிசுகள் விவரம் கேட்டு நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் இதுவரை 1ம்பிரதிவாதி தரப்பில் வாரிசுகள் விவரம் அளிக்கப்படவில்லை. இதனிடையே மேற்படி மனுதாரருக்கும், இறந்துபோன 1மஎதிர்மனுதாரருக்கும் இடையே நடைபெற்று வரும் மேல்முறையீட்டில் 02.01.2020 1ம்பிரதிவாதியின் சகோதரர் தரப்பில் வாரிசுகள் விவரம் அளிக்கப்பட்டது. எனவே மேற்படி தாவாவில் 1ம்பிரதிவாதியின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்க மனுதாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டது. எனவே 1ம்பிரதிவாதியின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்க 85 நாட்கள் காலதாமதம் ஆகிவிட்டது என்பதால் மேற்படி காலதாமதத்தை மன்னிக்க கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) 8மஎதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 5 முதல் 7, 9மஎதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

மனுதாரரும், எதிர்மனுதாரர்களும் மற்றும் உத்தேச தரப்பினர்களும் நெருங்கிய உறவினர்கள். ஆகவே வாரிசுகளான உத்தேச தரப்பினர்கள் குறித்து மனுதாரருக்கு தெரியாது எனவும், மேல்முறையீட்டில் உத்தேச தரப்பினர்கள் குறித்து தகவல்கள் அளிக்கும் வரை காத்திருந்ததாகவும் கூறமுடியாது. காலதாமதமாக மனுதாக்கல் செய்வதிலிருந்து தப்பிப்பதற்காக மேற்படி காரணத்தை மனுதாரர் கூறியுள்ளார். இம்மனுவில் எவ்வித உண்மையும் இல்லை என்பதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 5 முதல் 9மஎதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர் தரப்பில் தாவா நிலுவையில் இருந்தபோது 1ம்பிரதிவாதி 02.08.2019 ல் இறந்துவிட்டார் எனவும், 1ம்பிரதிவாதியின் வாரிசுகள் விவரம் கேட்டு நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது எனவும், ஆனால் இதுவரை 1ம்பிரதிவாதி தரப்பில் வாரிசுகள் விவரம் அளிக்கப்படவில்லை எனவும், இதனிடையே மேற்படி மனுதாரருக்கும், இறந்துபோன 1ம்எதிர்மனுதாரருக்கும் இடையே நடைபெற்று வரும் மேல்முறையீட்டில் 02.01.2020 1ம்பிரதிவாதியின் சகோதரர் தரப்பில் வாரிசுகள் விவரம் அளிக்கப்பட்டது எனவும், எனவே மேற்படி தாவாவில் 1ம்பிரதிவாதியின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்க மனுதாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டது எனவும், எனவே 1ம்பிரதிவாதியின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்க ஏற்பட்ட 85 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) 5 முதல் 9 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரரும், எதிர்மனுதாரர்களும் மற்றும் உத்தேச தரப்பினர்களும் நெருங்கிய உறவினர்கள் எனவும், ஆகவே வாரிசுகளான உத்தேச தரப்பினர்கள் குறித்து மனுதாரருக்கு தெரியாது எனவும், மேல்முறையீட்டில் உத்தேச தரப்பினர்கள் குறித்து தகவல்கள் அளிக்கும் வரை காத்திருந்ததாகவும் கூறமுடியாது எனவும், காலதாமதமாக மனுதாக்கல் செய்வதிலிருந்து தப்பிப்பதற்காக மேற்படி காரணத்தை மனுதாரர் கூறியுள்ளார் எனவும், இம்மனுவில் எவ்வித உண்மையும் இல்லை என்பதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 5 முதல் 9 ம் எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளது தெரிய வருகிறது.

(iii) இருதரப்பிலும் உத்தேச தரப்பினர்கள் 1ம்எதிர்மனுதாரரின் வாரிசுகள் என்பதை ஒப்புக் கொண்டுள்ளனர். மனுதாரர் தரப்பில் 1ம்எதிர்மனுதாரரின் வாரிசுகள் குறித்து தெரியவில்லை என்பதால் அவருடைய வாரிசுகளை தெரிவிக்குமாறு கோரியதாகவும், ஆனால் மேல்முறையீட்டில் வாரிசுகளின் தகவல்களை கொடுத்ததால் அதன் அடிப்படையில் மனுதாக்கல் செய்யப்பட்டதாக கூறியுள்ள போதும், வழக்குரையில் மனுதாரர்/வாதியும், 1ம்எதிர்மனுதாரரும் பங்காளிகள் என கூறியுள்ளார். எனவே

1ம்எதிர்மனுதாரரின் வாரிசுகள் குறித்து தெரியாது என கூறமுடியாது. இருந்த போதும் இவ்வழக்கானது 1ம்எதிர்மனுதாரரின் பெயரில் வருவாய்துறை ஆவணங்களை பெயர் மாற்றம் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் 1ம்எதிர்மனுதாரரின் வாரிசுகளான உத்தேச தரப்பினர்களையும் சேர்த்து இவ்வழக்கினை நடத்த உத்தரவிடுவது நீதிக்கு உகந்தது என்பதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆனால் மனுதாரர் 85 நாட்கள் காலதாமதமாக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர் 5 முதல் 9 ம் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.300/- செலவுத்தொகையாக 20.01.2021க்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, மனுதாரர், 5 முதல் 9ம்எதிர்மனுதாரர்களுக்கு ரூ.300/- செலவுத்தொகையாக 20.01.2021க்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க. 21.01.2021.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 07ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/-திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :- இல்லை

ஒப்பம்/-திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.